OL/2010/11-T-I, II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

11 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## பௌத்தம் I

கவனிக்க :

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை** (X) **இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. தமது உடம்பைப் பார்த்து அது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த வக்கலிதேரரை அழைத்துப் புத்தர் பெருமான் கூறியவை
   (1) நோயாளருக்குப் பணிவிடை செய்பவன் அவன் எனக்குப் பணிவிடை செய்கிறான்.
   (2) எவன் தர்மத்தைக் காண்கிறானோ அவன் என்னைக் காண்கிறான்.
   (3) எவன் அன்பு கருணையை மைத்திரி விருத்தி செய்கிறானோ அவன் நற்குடியில் பிறப்பெடுப்பான்.
   (4) எவன் பாவச் செயல்களைச் செய்கிறானோ அவன் நகரத்தில் பிறப்பெடுப்பான்.

2. ஞான உலகினை நோக்கிச் சென்ற எளிமையான தனிமையான வாழ்க்கையை நடாத்தி பக்தியும் பிரகாசிக்கின்ற மனித ஆளுமைகளும் நிரம்பி இந்த உலகிற்கு அப்பால் சென்ற உண்மையான மனிதனாகப் புத்தர் பெருமானை அவரின் வாழ்வின் மூலம் நான் காண்கிறேன். புத்தர் பெருமான் பற்றி இவ்வாறு கூறியவர்
   (1) எச். ஜி. வெல்ஸ்
   (2) சேர் எட்வின் ஆர்னொல்ட்
   (3) ஜவஹர்லால் நேரு
   (4) அப்துல் அதாஹிலா

3. "பிராமணனே, நீரிலிருந்து மேலே உயர்ந்து நின்று நீருடன் தொடர்பின்றி இருக்கும் தாமரைபோல நானும் இந்த உலகில் பிறந்து இந்த உலகிலே வளர்ந்தாலும் இந்த உலகை விட்டு மேலே வாழ்கிறேன். ஆகவே என்னைப் புத்தர் என அறிந்துகொள்வாயாக" - புத்தர் பெருமான் இவ்வாறு தம்மை அறிமுகப்படுத்தியது
   (1) சங்கி பிராமணனுக்கு
   (2) சோதண்ட பிராமணனுக்கு
   (3) பொத்தபாத பிராமணனுக்கு
   (4) துரோண பிராமணனுக்கு

4. போதிசத்துவ சித்தார்த்தரினால் அடையப்பட்ட (தஸபாரமிதா) சம்பூரண நிலைகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவையாவன
   (1) சீல, சமாதி, பன்ன
   (2) சாவகபோதி, பச்சேகபோதி, சம்மாசம்போதி
   (3) பாரமி, உபபாரமி, பரமாத்த பாரமி
   (4) தான, சீல, பாவனா

5. தமது சொந்த வாழ்க்கையை அர்ப்பணிப்பதன் மூலம் சம்பூர்ண நிலையில் முழுமையடைதலைக் குறிப்பது
   (1) பாரமி (2) உபபாரமி (3) பரமாத்த பாரமி (4) வீமம்சாபாரமி

6. எமது போதிசத்துவர் நெக்கம்ப பாரமிதாவை பூரணமாக்கிய விதத்தை விளக்கும் ஜாதகக் கதை
   (1) வண்ணுபத ஜாதக
   (2) மகாதேவ ஜாதக
   (3) தேமிய ஜாதக
   (4) உம்மக்க ஜாதக

7. ஓ துறவிகளே அதிகமானோர்களுக்கு நன்மை செய்வதற்காகப் பயணங்களை மேற்கொள்ளுங்கள் என புத்தர் பெருமான் அறிவுரை கூறியது
   (1) ஐந்து துறவிகளுக்கு
   (2) யசகுல புத்திரன் உள்ளிட்ட குழுவினருக்கு
   (3) உருவெலகாசியப்ப உள்ளிட்ட குழுவினருக்கு
   (4) முதலில் தேதர்களான அறுபது பேருக்கு

[பக். 2 ஐப் பார்க்க

8. சோவான் நிலையையடைந்த ஐந்து துறவிகளும் ஆகன்ந் தேரர்களாவதற்குச் செவிமடுத்தது
   (1) அனந்த லக்கன சூத்திர
   (2) தம்ம சக்கபவத்வன சூத்திர
   (3) ஆதித்த பரியாய சூத்திர
   (4) வேதனா பரிக்கஹ சூத்திர

9. பிம்பிசார மன்னால் புத்தபெருமானுக்குக் காணிக்கையாக்கப்பட்ட ஆராமை
   (1) ஜேதவனராமய (2) வேலுவனராமய (3) பூர்வாராமய (4) நியக்ரோராமய

10. தான் விளங்கிக் கொண்ட தர்மத்தை ஆசைகள் நிறைந்த சாதாரண மக்கள் விளங்கிக் கொள்வதில் உண்டாகும் சிரமங்கள் பற்றிச் சிந்தித்துக் கொண்டு புத்தர்பெருமானிடம் தர்மம் பற்றி போதிக்குமாறு அழைப்பு விடுத்தவர்
   (1) சஹம்பதி பிரம்மா
   (2) உத்தகராமபுத்திர தபசி
   (3) சஜ்ஜய பிரிவேஜி
   (4) சொத்திய பிராமணன்

11. பௌத்த சாசனத்தில் இருமடி மணிகளிடம் சரணடைந்த இல்லற பக்தர்களாகக் கருதப்படுவோர்
   (1) தபசிகளான அசித, சர்வமித்த
   (2) தபசிகளான அலாரகாலாமா, பார்கவ
   (3) வர்த்தகர்களான தபசு, பல்லுக
   (4) ஐந்து தபசிகள்

12. மாணவர்களுடன் விகாரைக்கு வந்த ஆசிரியை மாணவர்களுக்கு மூன்று வகை சைத்தியங்கள் பற்றி விளக்கினார். ஆசிரியை சரியான அவற்றை எடுத்துக்காட்டியபடி புத்தர் பெருமான் சாய்ந்திருந்த ஸ்ரீமகாபோதி இனங்காணப்படுவது
   (1) சாரீரிக சைத்திய
   (2) பாரிபோகிக சைத்திய
   (3) உத்தேசிக சைத்திய
   (4) சதாதுக்க சைத்திய

13. "(மரணத்தின் பின்னரான) சொர்க்க வாழ்வின் மகிழ்ச்சியை எதிர்பார்த்து வழங்கப்படும் தானத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தமானது" என சங்கத்தின் நற்குணம் வெளிப்படுத்தப்படுவதைக் குறிப்பிடுவது
   (1) தக்கிணேய்ய (2) அஞ்சலிகரணீய (3) ஆ குணேய்ய (4) பாகுணேய்ய

14. இளம் தம்பதியினர் தமது பிள்ளைகளுடன் தினமும் புத்தர் பெருமானை வழிபடுவதில் ஈடுபட்டனர். இவர்கள் இவ்வாறு செய்வதில் ஈடுபடுதல் பாடசாலையில் பௌத்த சமய பாடத்தில் கற்ற
   (1) சமயப் பற்றுள்ள பௌத்தர்களின் பண்புகளை விளங்கிக் கொண்டிருந்தமை
   (2) நிர்வாண நிலை காண்பதற்கான ஒரேயொரு வழியாக இருந்தமை
   (3) குருட்டுப் பாவனையின் பண்புகளை விளங்கிக் கொண்டிருந்தமை
   (4) உண்மையான நம்பிக்கையுடையவர்களின் பண்புகளை விளங்கிக் கொண்டிருந்தமை

15. ஒருவருக்கொருவர் சமூகத் தொடர்புகளைக் கட்டியெழுப்பி ஒவ்வொருவரும் தமது கடமைகளை நிறைவேற்றி ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு அறிவுரை வழங்கும் போதனை கொண்டது
   (1) மங்கள சூத்திர
   (2) பராபவ சூத்திர
   (3) தம்மிக சூத்திர
   (4) சிகாலோவாத சூத்திர

16. நோயாளர்களுக்கு பணிவிடை செய்பவர்கள் புத்தபெருமானுக்குப் பணிவிடை செய்பவர்கள் என்ற வழிகாட்டலை வெளிப்படுத்தும் சித்திரம் ஒன்றை வரைவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்
   (1) தல்ல திஸ்ஸ தேரருக்கு பணிவிடை செய்த சந்தர்ப்பம்
   (2) மணிகார குலுபகதிஸ்ஸ தேரருக்குப் பணிவிடை செய்த சந்தர்ப்பம்
   (3) புத்திகத்திஸ்ஸ தேரருக்குப் பணிவிடை செய்த சந்தர்ப்பம்
   (4) லகுண்டக பத்திய தேரருக்குப் பணிவிடை செய்த சந்தர்ப்பம்

17. 'மெத்தாவை' விருத்தி செய்யும் ஒருவர் கைக்கொள்ள வேண்டியது என கரணிய சூத்திரத்தில் போதித்த பண்புகளில் கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைதல் என்பதைக் குறிப்பது
   (1) அனதிமானீ (2) சந்துஸ்ஸகோ (3) அப்பகிச்சோ (4) சந்தின்திரியோ

18. 'புத்தஸ்ஸ லோக தம்மெஹி - சித்தம் யச ந கம்பதி' மங்கள சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் கூற்று விவரிப்பது
   (1) பொருத்தமான பிரதேசத்தில் வசித்தல் வேண்டும்.
   (2) முட்டாள்களுடன் தொடர்பு கொண்டிருக்கக்கூடாது.
   (3) எண்வகை உலக இயல்புகளின் தொடர்புகளால் அசைக்கப்படாதவராக இருக்க வேண்டும்.
   (4) பெற்றோர்களை ஆதரிக்க வேண்டும்.

[பக். 3 ஐப் பார்க்க

19. பழகுவதற்குத் தகுதியான நண்பர்களைப் பெற முடியாவிட்டால் தனிமையில் வாழ்வது பொருத்தமானது என்பதை வலியுறுத்தி போதனை செய்த தம்ம பத செய்யுளின் முதல் இரு வரிகள்
   (1) சரங் சே நாதிகச்சேய்ய - செய்யங் சதிஸ மத்தனோ
   (2) அசாரெ சார மத்தி னொ - சாரெ சாஸார தஸ்ஸினோ
   (3) அக்கொச்சிமங் அவதிமங் - அஜினிமங் அஹாசிமெ
   (4) உத்தான வத்தோ சதிமனோ - சுசிகம்மஸ்ஸ நிஸ்ஸம்ம காரினொ

20. நீவரண தர்மம் எனப்படும் செயற்பாடற்ற மனம் அல்லது சயித்தசிக்க இன் சோம்பற்றன்மை என்பதைக் குறிப்பது.
   (1) வியாபத (2) தீனமித்தய (3) உத்தச்ச குச்குச்ச (4) விசிகிச்சா

21. பிராணிகள் ஐந்து திரள்களின் கூட்டம் என பௌத்தம் விளக்குகிறது. அந்த ஐந்து திரள்களாவன
   (1) பதவி, ஆபொ, தேஜொ, வாயொ, ஆகாச (2) ரூப, சப்த, கந்த, ரச, ஸ்பர்ச
   (3) சக்கு, சொத, காண, ஜீவிஹா, காய (4) ரூப, வேதனா, சஞ்ஞ, சங்கார, விஞ்ஞான

22. மைத்திரி விருத்தியின் பலனாக ஏற்படும் நல்வினைப் பயன்களில் அடங்காத விடயம்
   (1) கெட்ட கனவுகள் காணாமை
   (2) நினைவற்றுப் போகாது மரணம்
   (3) மனம் விரைவாக ஒருமுகப்படுதல் இல்லாமை
   (4) அக்கினி, நஞ்சு, ஆயுதங்கள் என்பவற்றால் தீங்கு ஏற்படாமை

23. மேலான எண்வழிப் பாதையில் காமம் வன்முறை கடும் பகைமை என்பவற்றிலிருந்து விலகியிருத்தலைக் குறிப்பிடுவது
   (1) சம்மாதித்தி (2) சம்மா சங்கப்ப (3) சம்மாவாயாம (4) சம்மா சத்தி

24. சேதனாஹம் பிக்கா வே கம்மங் வதாமி இந்த விளக்கத்துக்கமைய யாதாயினும் ஒரு செயல் கர்மம் எனப்படுவதற்குக் கட்டாயமாக அதில் இருக்க வேண்டியது
   (1) சேதனா (2) திருஷ்டி (3) குசல (4) அகுசல

25. எருதின் பின்னால் செல்லும் வண்டிற் சில்லுபோல ஒருவருக்குத் துன்பம் தொடர்வதற்கான காரணம் அவர் செய்த
   (1) குசல கர்மாவின் விளைவுகள் (2) அகுசல கர்மாவின் விளைவுகள்
   (3) அவேதனிக கர்மாவின் விளைவுள் (4) அஹேதுக்க கர்மாவின் விளைவுகள்

26. மாமரத்தின் விதையை நட்டால் மாமரக் கன்று எவருடைய தலையீடும் இன்றி வளர்தல் காரண காரிய வாதமாகும். இதனை தர்மத்தில் குறிப்பிடுவது
   (1) உத்து நியாம (2) பீஜ நியாம (3) தம்ம நியாம (4) சித்த நியாம

27. இந்த வாழ்க்கையிலே பலனைக் கொடுக்கும் கர்மா
   (1) தித்ததம்மவேதனீய கர்மா (2) உபபஜ்ஜவேதனீய கர்மா
   (3) அபராபரியவேதனீய கர்மா (4) அஹோசி கர்மா

28. எந்த உலகிலும் பிறப்பை எடுப்பதற்கு ஒருவருக்குத் துணையாகும் பாவபுண்ணிய (குசலாகுசல) கர்ம
   (1) உபகாதக கர்ம (2) உபபீலக கர்ம
   (3) உபஸ்தம்பக கர்ம (4) ஜனக கர்ம

29. ஹேதும் பற்றிச் சாசம்பதுங் - ஹேதுபங்கா நிரூஜ்ஜதி இந்தக் கோட்பாட்டுப் போதனையைக் குறிப்பது
   (1) கர்ம வாத (2) அஹேதுக்க அப்பச்சயத வாத
   (3) புனர்பவ வாத (4) பட்டிச்ச சமுப்பாதய

30. முதலாவது பௌத்த மகாநாட்டில் பிக்குகளுக்கு தர்ம வினய என்பவற்றைப் பேணுவதற்கு வாய்மொழி மூலம் அனுமதிக்கப்பட்டபோது சாரியுன் தேரரின் சீடர் பரம்பரைக்கு ஒப்படைக்கப்பட்டது
   (1) தீகநிகாய (2) மஜ்ஜிமநிகாய
   (3) சங்கயுக்தநிகாய (4) அங்குத்தரநிகாய

31. மூன்றாவது பௌத்த மகாநாட்டின் விளைவுகளில் உள்ளடக்கப்பட **முடியாத** விடயம்
   (1) தவறு செய்யும் பிக்குகளை சாசனத்திலிருந்து வெளியேற்றுதல்
   (2) புதிய நாடுகளில் சாசனத்தைத் தாபித்தல்
   (3) பத்துப் பொருள்களை தசவஸ்து நிராகரித்தல்
   (4) கதாவத்துப்பகரணய தொகுத்தல்

[பக். 4 ஐப் பார்க்க

32. பரம்பரைக் கதைகளில் குறிப்பிட்டுள்ளவாறு அனுராதபுர காலத்தில் பௌத்த மன்னர்கள் நிகழ்த்திய 'கிரிபாண்ட பூஜா' விழாவை நடத்தியதன் நோக்கம்
   (1) பல்வேறு தேவைப் பொருள்களைச் சேகரித்து அவற்றை பிக்குமார்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தல்
   (2) கிரிநிகண்டயாவிற்காக நடத்தப்பட்ட கொண்டாட்டங்கள்
   (3) மூவகைப் பயத்தைப் போக்குவதற்கு பிரித் ஓதுதல்
   (4) மலைகள் மீது பூஜைகள் நடத்துதல்

33. புத்தர் பெருமான் பரிநிர்வாணமடைந்து 236 ஆண்டுகளின் பின் பௌத்த மகாநாடு நடைபெற்ற இடம்
   (1) கொசம்புநுவரவில் கோசிதாராமய
   (2) ரஜகஹநுவரவில் சப்தபர்ணி குகை
   (3) விசாலாமஹநுவரவில் வாலுகாராமய
   (4) பெலலுப்நுவரவில் அசோகராமய

34. தூபியின் பாதுகாப்புக்காக தூபியைச் சுற்றிக் கட்டப்படும் கட்டடம்
   (1) பதானகர (2) சேதியகர (3) பட்டிமாகர (4) வாகல்கட

35. நீதியான நிர்வாகத்தினை நடத்த ஆட்சியாளரால் பின்பற்றப்பட வேண்டிய மேலான கொள்கைகளில் பத்து அரச தர்மங்களில் உள்ளடக்கப்பட்ட உடனடியாகத் தீர்மானம் எடுக்காது அறிவைப் பயன்படுத்துதலைக் குறிப்பது
   (1) பகைமை பாராட்டாமை
   (2) அஹிம்சை
   (3) பொறுமை
   (4) முரண்பாடு இன்மை

36. வஜ்ஜி குடியரசு ஆட்சியாளர்கள் பின்பற்றிய அவர்களின் வீழ்ச்சிக்கான ஏழு விடயங்களுக்கு **உரித்தில்லாத** விடயம்
   (1) அடிக்கடி கூட்டம் நிகழ்த்துதல்
   (2) ஒற்றுமையாகக்கூடி ஒற்றுமையாகக் கலைந்து செல்லுதல்
   (3) முதியோர்களுக்கு மரியாதை செலுத்துதல்
   (4) விதிமுறையில் இல்லாத சட்டங்களை விதித்தலும் விதிக்கப்பட்ட சட்டங்களை மீறாமலிருத்தலும்

37. வலகம்பா மன்னன் காலத்தில் மாத்தளை அலுவிகாரையில் நடத்தப்பட்ட முக்கியத்துவம் பெற்ற பணி
   (1) அதுவரை நிலவிய வரட்சி மறைந்து பெருமழை பெய்தமை
   (2) நினைவு மூலம் பேணப்பட்ட தர்மம் நூலுருவம் பெற்றமை
   (3) தேரவாத, மகாயான எனப் பிக்குமாரிடம் பிரிவு ஏற்பட்டமை
   (4) அருகிலுள்ள நாடுகளுக்கு திரிபிடகம் எடுத்துச் செல்லப்பட்டமை

38. இலங்கையின் பௌத்தசாசன வரலாற்றில் பிக்கு சங்கத்தினருக்கு ஆராமை நன்கொடையாக வழங்கப்பட்ட போதும் முதல் தடவையாக தனிப்பட்ட முறையில் ஆராமை ஒன்றை நன்கொடையாக வழங்கியவன்
   (1) துட்டகைமுனு மன்னன்
   (2) கவந்தீச மன்னன்
   (3) வலகம்பா மன்னன்
   (4) மகாசேன மன்னன்

39. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சிங்கள பௌத்த பிள்ளைகளுக்காக பாடசாலைகள் இல்லாததினால் பௌத்த பிரம்மஞான சபையைத் தாபித்து அதன் மூலம் பௌத்த பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டவர்
   (1) சேர் ஹென்றி ஒல்கொட்
   (2) அநகாரிக தர்மபாலா
   (3) மீகெட்டுவத்தே குணானந்த தேரர்
   (4) திரு. குணபால மலலசேகர

40. மூன்று கதவுகள் மூலம் செய்யப்படுகின்ற அகுசல செயல் வகைக்குள் **அடங்காத** விடயம்
   (1) அபித்தியா
   (2) வியாபாதய
   (3) தவறான நோக்கு
   (4) சக்காய தித்தி

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

11 T I,II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
**Buddhism I, II**

## பௌத்தம் II

* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை எழுதுக.
   (i) ஜேத்தவனராமய பூர்வாராமய ஆகியவற்றைக் கட்டி புத்தர் பெருமானுக்குக் காணிக்கையாக வழங்கியவர் யார் ?
   (ii) புத்தர் பெருமான் ஒரு நாளை ஐந்து பிரிவுகளாக வகுத்து மிகவும் கருத்துள்ள விதத்தில் ஒரு நேர அட்டவணையின்படி முகாமைத்துவம் செய்து காலத்தைக் கழித்தார். அவர் பகல் வேளையை இரு பகுதிகளாக வகுத்துச் செலவழித்தார். அந்த **இரு** பிரிவுகளின் பெயர் குறிப்பிடுக.
   (iii) சமூகத்தில் ஏனைய மனிதர்கள் பிராணிகளைக் கொல்லுதல் போன்ற பாவச் செயல்களில் ஈடுபட்டு தூய்மையற்று இருக்கும்போது அவற்றைக் கண்டாலும் அவற்றில் ஈடுபடாது தூய்மையான எண்ணங்களுடன் சிலர் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய பாதையின் பெயரைக் குறிப்பிடுக.
   (iv) பௌத்த சாசனத்தில் குறிப்பிடப்படும் நால்வகைச் சமூகத்தினரைக் குறிப்பிடுக.
   (v) மன அமைதியின்மை அல்லது பிரச்சினைகள் ஏற்படும்போது கலக்கமடையாது தைரியத்துடன் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு அறிவுரைகள் வழங்கும் கோட்பாடுகள் அடங்கிய கைந்நூலாக பௌத்தர்கள் கருதும் பௌத்த நூல் யாது ?
   (vi) பின்வரும் கூற்றுகளால் புத்தர் பெருமான் சமூகத்துக்கு வழங்கிய செய்தி யாது ?
   "கம்மனா வஸ்லொ ஹொதி – கம்மனா ஹொதி – பிராமணோ"
   (vii) இவ்வுலகில் இயற்கை நிகழ்வுகள் நீண்டகாலத்தில் சுருங்குவதாகவும் மேலும் பெருமளவு காலத்துக்கு மீண்டும் விரிவடைவதாகவும் எடுத்துக்காட்டிய புத்தர் பெருமான் காரண காரியத் தொடர்பிற்கு அமைய பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சியை விளக்கினார். இவ்விடயங்களை விவரிக்கும் போதனைகள் அடங்கிய சூத்ர எது ?
   (viii) யொ தம்மங் பஸ்ஸதி, ஸொ பட்டிச்சஸமுப்பாதங் பஸ்ஸதி இக்கூற்றினால் முன்வைக்கப்படும் கோட்பாட்டு விடயம் யாது ?
   (ix) மாணவர்களுடன் வருடாந்த கல்விச் சுற்றுலாவில் சென்ற ஆசிரியை அனுராதபுரத்தில் உள்ள தூபராமய, ருவான்வெலிசய, அபயகிரி, ஜேதவனராமய ஆகியவற்றைப் பார்வையிட்ட பின்னர் அவற்றைக் கட்டுவித்த மன்னர்கள் நால்வரும் யார் எனக் கேட்டார். மாணவர்கள் கூற வேண்டிய சரியான விடையை எழுதுக.
   (x) பிக்கு ஒருவர் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்க அவசியமான அடிப்படை நான்கு விடயங்கள் பௌத்த தர்மத்தில் சிவ்பஸய எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் யாவை ?

2. 'சீல' அனுஷ்டானங்களில் ஈடுபட்டுள்ள மாணவர் குழுவுக்கு தியான நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து வைத்த வணக்கத்துக்குரிய தேரர் பின்வருவமாறு விளக்கம் கூறினார்.
   புண்ணியமுடைய குழந்தைகளே இன்று நாங்கள் 'மைத்திரி தியானத்தைப் பயிற்சி செய்வோம்.' இது பற்றிய விடயங்களை விளக்குகின்ற காட்டில் தியானத்தில் ஈடுபட்ட பிக்குமார் கூட்டத்துக்கு 'மைத்திரி' மூலம் மனிதரல்லாத பிராணிகளால் ஏற்படுத்தப்படும் தடைகளிலிருந்து விடுபடுவதற்கும் அப்பிராணிகளின் மனதை சாந்தப்படுத்துவதற்கும் என புத்தர் பெருமான் நிகழத்திய முக்கிய போதனை ஒன்றுண்டு. இந்த போதனை முதலில் 'மைத்திரி'யைப் பின்பற்றும் ஒருவரிடம் இருக்க வேண்டிய நற்குணங்கள் அல்லது நடத்தைப் பண்புகளைப் பற்றி விவரிக்கிறது. பின்னர் 'மைத்திரி'யினை வளர்க்க வேண்டிய உயிருள்ள பிராணிகள் கூட்டம் பற்றிக் குறிப்பிடுகிறது. பின்னர் மைத்திரியை வளர்த்துச் செல்லும் செயன்முறை பற்றி விளக்கப்படுகிறது.
   (i) இங்கு குறிப்பிடப்படும் 'மைத்திரி'யை வளர்த்துச் செல்வதற்கான விடயங்களை உள்ளடக்கிய சூத்திர எது ?
   (ii) இந்த சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி மைத்திரி வளர்த்துச் செல்லும் ஒருவரிடம் இருக்க வேண்டிய **மூன்று** குணப்பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.
   (iii) அமைதியான சமூகம் ஒன்றை உருவாக்க அன்பின் கருணை மைத்திரி எவ்வாறு உதவும் என விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**3.** "ஸ்வாமி, இந்தக் கிராமத்துக்கு வரும் துறவிகள் பிராமணர்கள் ஏனையோரின் போதனைகளைக் கண்டித்துத் தமது போதனைகளை மேலானதெனக் காட்டுகின்றனர். வேறு துறவிகள் பிராமணர் சிலர் தமது போதனைகளை மட்டுமே உயர்வானதாகக் காட்டி ஏனைய துறவிகள் பிராமணர்களின் போதனைகளை இழிவாகக் காட்டுகின்றனர். ஸ்வாமி இந்த துறவிகள் பிராமணர்களில் எவர் உண்மை கூறுகிறார் எவர் பொய் கூறுகின்றனர் என எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது."

(i) புத்தர் பெருமானுக்கு மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாரால் முன்வைக்கப்பட்டன ?

(ii) இந்த சந்தர்ப்பம் தொடர்பான விடயங்கள் அடங்கிய போதனையில் புத்தர் பெருமான் போதித்தமூன்று புண்ணியத் (குசல)துக்கான மூலங்களின் பெயர் குறிப்பிடுக. இவ்வற்றை எவ்வாறு மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த முடியும் ?

(iii) சிந்தனைக்கும் விசாரணைக்கும் பௌத்தம் எவ்வாறு வழிகாட்டுகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**4.** எசல பௌர்ணமி தினத்தில் சில அனுஷ்டானங்களில் ஈடுபட்ட மாணவர்களுக்கு அறப் போதனைக்காக வருகை தந்த வணக்கத்துக்குரிய சமய குரு தனது தலைப்பாக 'தம்ம சக்கபீபத்தன சூத்திர'வைத் தெரிவுசெய்தார். அத்தேரர் முதலில் பின்வருமாறு கூறினார்.

"இந்த சூத்திரத்தில் முதலில் துறவி ஒருவர் கைவிட வேண்டிய இரு அந்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக நான்கு மேலான உண்மைகளும் மூன்றாவதாக மேலான எண் வழிப்பாதைகளும் குறிப்பிடப் பட்டுள்ளன."

(i) இந்த சூத்திரத்தில் குறிப்பிடப்படும் **இரு** அந்தங்களையும் எழுதுக.

(ii) நான்கு மேலான உண்மைகளையும் எழுதுக.

(iii) ஒழுக்க விழுமியங்கள் கொண்ட சமூகத்தை உருவாக்க மேலான எண்வழிப்பாதையில் சில போதனை உதவும் விதத்தினை விளக்குக.

**5.** (i) "எல்லாப் புத்தர்களினதும் நல்லறிவுப் போதனைகளும் இதுவே" என்று புத்தரினால் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட தம்பத செய்யுளை எழுதுக.

(ii) இச்செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ள "எல்லாப் புத்தர்களினதும் நல்லறிவுப் போதனை (அனுசாசன)" யாது ?

(iii) உங்கள் வாழ்வை வளமுள்ளதாக்குவதற்கு இந்தச் செய்யுளில் காணப்படும் வழிகாட்டல்களை மதிப்பிடுக.

**6.** இலக்கிய ரசனையுடன் அறம்சார் ரசனைக்கும் போதனைகளுக்கும் ஒழுக்க விழுமியங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் செய்யுள் இலக்கியங்களை எமது பாரம்பரிய சொத்துகளாகப் பெற்றுள்ளோம். இது போன்று போதனைக் கதை இலக்கியங்களாக வளர்ச்சி பெற்ற உரை இலக்கியங்களும் எம்மிடம் உள்ளன.

(i) அறிவுரை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு கோட்டை காலத்தில் விதாகம தேரரினாலும் (மைத்திரி ஹிம்பாணன்) சீதாவாக்கை காலத்தில் அழகிய வண்ணமுக வெட்டியினாலும் ஆக்கப்பட்ட அறிவுரை நூல்கள் இரண்டும் யாவை ?

(ii) புத்தரின் வாழ்க்கை அல்லது பௌத்த தர்மம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிங்கள உரைநடை ஆக்கங்கள் **மூன்று** எழுதுக.

(iii) "மகிந்த தேரரின் வருகையினால் நாம் சொத்தாகப் பெற்றுக் கொண்டவற்றுள் சிங்கள பௌத்த இலக்கியங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்." விளக்குக.

**7.** (i) இளைஞனான டேவிட் ஹேவவிதாரண அநகாரிக தர்மபாலாவாகிய விதத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ii) அநகாரிக தர்மபாலா பௌத்த சமயத்துக்குச் செய்த சேவைகள் **மூன்றினை** எடுத்துக் காட்டுக.

(iii) அநகாரிக தர்மபாலாவின் வரலாற்றிலிருந்து மாணவர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய **மூன்று** முன்மாதிரிகளை விளக்குக.

* * *